# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 216/மா/2024**
**நாள்: 15.05.2025**

| | | |
|---|---|---|
| திருமதி அனிதா ஆனந்த்<br>காஞ்சிபுரம் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>காஞ்சிபுரம் மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

காஞ்சிபுரம், தெற்கு கிருஷ்ணன் தெரு (பழைய ரயில்வே நிலையம் அருகில்), எண் 2 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி அனிதா ஆனந்த் என்பவரின் 25.11.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.11.2024 அன்று பெறப்பட்டு, 216/மா/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

காஞ்சிபுரம், தெற்கு கிருஷ்ணன் தெரு (பழைய ரயில்வே நிலையம் அருகில்), எண் 2 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி அனிதா ஆனந்த் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"I humbly submit that I own two plots at Kamarajar Nagar Extension, Kanchipuram, situated in Konerikuppam Village Survey Nos.148/55 in Patta No.8687 and 148/57 in Patta No.8689. My plots are falling in Konerikuppam Village limits and are located on the northern row of Kamarajar Street, Kanchipuram City. The said Kamarajar street is running from east to west and connects Damalwar street on east and Big Kammala Street (Kanchipuram – Chennai Road) on west. The Kamarajar street was completely blocked and encroached in the name of a Pilliyar temple in the middle of the street and now there is no access from my plots to reach Big Kammala Street via Kamarajar Street.

2. I further submit that on the other end of Kamarajar Street, someone has occupied a temporary shed raised by the Railways for keeping their materials when meter gauge rail was changed to broad gauge rail about 10 or 15 years ago. The same person also managed to get electricity connection for the temporary structure through the means known to him. Now the said person has gradually increased the encroached portion and blocked the way to Damalwar Street from Kamarajar street. Then the Kancheepuram Corporation has also done

its part by letting out of the drain and rain water stagnating on the other side of Damalwar Street in a private property situated near my plot through a submerged channel laid across the Damalwar street. Now there is no access for my plots from both sides of the street. Though I approached the Tahsildar, Kanchipuram in this regard for removing the encroachments, there was no response. I further received the vague answer that only the Commissioner of Kanchipuram City Corporation is obliged to remove the encroachment.

3. I further submit that as I am not sure of the authority which I have to approach and within those jurisdiction, both the encroachments are located, I sent a requisition dated 2.9.2024 to both the Commissioner, Kanchipuram Corporation and Tahsildar, Kancheepuram Taluk to remove both the encroachments and to do some other alternative for draining out rain water instead of draining out in my neighbouring plot. To bring the fact to the knowledge of the higher officials, I formally sent the requisition to the District Collector and District Revenue Officer as well. The Requisition was also sent to their official mail ids, but there has been no response till now.

4. I therefore pray your Honour to direct the Commissioner, Kanchipuram Corporation and Tahsildar, Kanchipuram Taluk, to remove the encroachments on both side of Kamarajar Street i.e. one encroachment in the name of Pilliyar Temple at the middle of the street and another encroachment located on the main road itself at the junction of Damalwar Street and Kamarajar Street and to do any other alternative way to drain out the rain water instead of draining in the private property near my plots.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.11.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 24.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது 21.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"திருமதி அனிதா ஆனந்த் என்பவர் தமக்கு சொந்தமான காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் கோனேரிக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட புல எண் 148/55 மற்றும் 148/57 கொண்ட மனைப்பிரிவிற்கு காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட காமராஜர் நகர் பகுதியில் அமையப் பெற்றுள்ள பிள்ளையார் கோவிலை அகற்றி தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர், காஞ்சிபுரம் மற்றும் ஆணையர், காஞ்சிபுரம் மாநகராட்சி அவர்களுக்கு 02.09.2024–ல் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி இடமானது மாநகராட்சி எல்லை வரம்பிற்குள் வராததால் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலவில்லை.

திருமதி அனிதா ஆனந்த் என்பவர் காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் கோனேரிக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தமது மனைப்பிரிவிற்கு பாதை வேண்டும் எனவும், அதற்கு காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜர் நகர், பிள்ளையார் கோவிலை இடித்து

அப்புறப்படுத்தி பாதை ஏற்படுத்தி தர வேண்டும் என 25.11.2024 நாளிட்ட மனுவில் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்துள்ளார். அதன் பேரில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலர்களால் மேற்படி புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு நேரில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கள ஆய்வின்போது அப்பகுதி வாழ் மக்களால் ஏற்கனவே மேற்படி புகார்தாரரின் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு பாதை ஏற்படுத்த கோரப்பட்டது பேரில் காஞ்சிபுரம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் O.S.No.497/2000 என வழக்கு அன்றைய நில உரிமையாளர் திரு.சம்மந்தன் மற்றும் திருமதி.கிருஷ்ணவேணி ஆகியோரால் தொடுக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி அவர்களால் 30.07.2003ல் காமராஜர் நகரில் இருந்து புகார்தாரரால் கோரப்பட்டுள்ள காமராஜர் நகர் வழியாக மனைப்பிரிவிற்கு பாதை ஏற்படுத்தி தர முகாந்திரம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகார்தாரரின் மனைப்பிரிவு அமைவிடம் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட கோனேரிக்குப்பம் ஊராட்சி பகுதியை சேர்ந்த மனைப்பிரிவிற்கு புகார்தாரர் திருமதி.அனிதா ஆனந்த் அவர்களின் கோரிக்கையின் பேரில் காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜர் நகரில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலை இடித்து பாதை விடுவதற்கு மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்ற உத்தரவின் காரணமாக வழிவகை இல்லை. எனவே, மனுதாரரின் உரிய முகாந்திரமில்லாத புகாரை இரத்து செய்து உத்திரவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் சார்பாக திரு. விவேக் ஆனந்த் என்பவர் 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''காஞ்சிபுரம், கோனேரிக்குப்பம் கிராமத்தில் பட்டா எண் 8687 சர்வே எண் 148/55 மற்றும் பட்டா எண் 8689 சர்வே எண் 148/57லும் உள்ள இரு மனைகள் ஆகும். இந்த மனைகள் காமராஜர் தெரு வடக்கு வரிசையில் உள்ளது என்றும் இந்த தெருவானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் சாலையாகும். கிழக்கே தாமல்வார் தெருவினையும் மேற்கே பெரிய கம்மாளத் தெருவினையும் காமராஜர் தெருவானது இணைக்கிறது. காமராஜர் தெருவின் நடுவில் உள்ள பிள்ளையார் கோவிலானது முற்றிலும் மக்கள்செல்லும் வழியில் கட்டப்பட்டுள்ள நிலையில் எனது மனைகளுக்கு பெரிய கம்மாளத் தெரு வழியாக செல்ல இயலவில்லை.

மேலும் காமராஜர் சாலையின் மற்றொரு பகுதியில் இரயில்வே துறையினர் அமைத்துள்ள தற்காலிக கூடாரத்தில் பொருட்கள் வைக்க பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் அதனை ஒரு நபர் ஆக்கிரமித்து அந்த கூடாரத்தை மேலும் விரிவு படுத்தி காமராஜர் தெருவிலிருந்து தாமல்வார் தெரு செல்ல இயலாதவாறு செல்லும் வழி தடுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாநகராட்சியும் மழைநீர் வடிகால்வாய் மூலம் எனது பக்கத்து மனையில் மழைநீர் வடிய ஏற்பாடு செய்துள்ளது. இதனால் எனது மனைக்கு செல்லும் வழிகள் யாவும் அடைக்கப்பட்டுள்ள நிலையில் தாசில்தார் மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சியை அணுகியும் எந்த வித பயனும் இல்லை.

02.09.2024 அன்று தாசில்தார் மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் இருவருக்கும் அனுப்பிய மனுவில் இந்த தடைகளை அகற்றவும் மழைநீர் தேங்குவதை தடுக்கவும் கோரியிருந்தேன். இது தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் இருவருக்கும் புகார் அனுப்பியும் எந்தவித நடவடிக்கையும் இல்லை.

மேற்காணும் சூழ்நிலையில் மேற்சொன்ன எனது கோரிக்கைகள் தொடர்பாக ஆக்கிரமிப்புகளை அகற்றி எங்கள் மனைக்கு செல்ல வழி ஏற்படுத்தி கொடுக்குமாறு உரிய நடவடிக்கை எடுக்க காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சியின் கண்காணிப்பாளர் 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"திருமதி.அனிதா ஆனந்த் என்பவர் தமக்கு சொந்தமான காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் கோனேரிக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட புல எண்.148/55 மற்றும் 148/57 கொண்ட மனைப்பிரிவிற்கு காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட காமராஜர் நகர் பகுதியில் அமையப்பெற்றுள்ள பிள்ளையார் கோவிலை அகற்றி தருமாறு மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர், காஞ்சிபுரம் மற்றும் ஆணையர், காஞ்சிபுரம் மாநகராட்சி அவர்களுக்கு 02.09.2024ல் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி இடமானது மாநகராட்சி எல்லை வரம்பிற்குள் வராததால் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலவில்லை.

திருமதி.அனிதா ஆனந்த் என்பவர் காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் கோனேரிக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தமது மனைப்பிரிவிற்கு பாதை வேண்டும் எனவும் அதற்கு காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜர் நகர், பிள்ளையார் கோவிலை இடித்து அப்புறப்படுத்தி பாதை ஏற்படுத்தி தர வேண்டும் என கோரியுள்ளதின் பேரில் உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்துள்ளார். அதன் பேரில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலர்களால் மேற்படி புகார் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு நேரில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கள ஆய்வின்போது அப்பகுதி வாழ் மக்களால் ஏற்கனவே மேற்படி புகார்தாரரின் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு பாதை ஏற்படுத்த கோரப்பட்டது பேரில் காஞ்சிபுரம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் O.S.No.497/2000 என வழக்கு அன்றைய நில உரிமையாளர் திரு.சம்மந்தன் மற்றும் திருமதி.கிருஷ்ணவேணி ஆகியோரால் தொடுக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி அவர்களால் 30.07.2003ல் காமராஜர் நகரில் இருந்து புகார்தாரரால் கோரப்பட்டுள்ள காமராஜர் நகர் வழியாக மனைப்பிரிவிற்கு பாதை ஏற்படுத்தி தர முகாந்திரம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகார்தாரரின் மனைப்பிரிவு அமைவிடம் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட கோனேரிக்குப்பம் ஊராட்சி பகுதியை சேர்ந்த மனைப்பிரிவிற்கு புகார்தாரர் திருமதி.அனிதா ஆனந்த் அவர்களின் கோரிக்கையின் பேரில் காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜர் நகரில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலை இடித்து பாதை விடுவதற்கு மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்ற உத்தரவின் காரணமாக வழிவகை இல்லை.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனை குறித்தான விவரம் தொடர்பாக நகர அமைப்பு அலுவலகத்தால் மட்டுமே விவரமான பதில் அளிக்க இயலும் என்பதால், மனுதாரரின் கோரிக்கை மீது நகர அமைப்பு அலுவலர் ஆஜராகி விரிவான வாக்குமூலம் அளிக்கும் வகையில் வேறொரு தேதியில் விசாரணை நடத்திட அனுமதி அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

7.காஞ்சிபுரம் மாநகராட்சி கண்காணிப்பாளர் 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது தன்னுடைய வாக்குமூலத்தில் மனுதாரரின் கோரிக்கை மீது நகர அமைப்பு அலுவலர் ஆஜராகி விரிவான வாக்குமூலம் அளிக்கும் வகையில் வேறொரு தேதியில் விசாரணை நடத்திட அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். எனவே, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் காஞ்சிபுரம் மாகராட்சி நகர அமைப்பு அலுவலர் ஆகியோரை 17.02.2025 அன்று மறுவிசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8. மேலும், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது 14.02.2025 நாளிட்ட அறிக்கையில்

"தற்போது இம்மாநகராட்சியில் மாநகர திட்டமிடுநர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளதால், மேற்கண்ட மனு குறித்து வாக்குமூலம் அளித்திட திரு. க. பன்னீர்செல்வம், துணை மாநகர பொறியாளர் மற்றும் உதவி மாநகர திட்டமிடுநர் (பொ) அவர்களை பொறுப்பாக நியமித்ததின் பேரில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தினை மாநகராட்சி அலுவலர்களுடன் கள ஆய்வு செய்ததில், அம்மனைப்பிரிவு காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கோனேரிக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியாக உள்ளது. இம்மனைப்பிரிவில் வடக்கு திசையில் இரயில்வே பாதையும் மற்றொரு பகுதியான கிழக்கு திசையில் மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு (தாமல்வார் தெருவும்) சொந்தமான காஞ்சிபுரம் ஏனாத்தூர் இணைப்பு சாலை (ODR) அமைந்துள்ளது. மனுதாரரின் நிலமும், தாமல்வார் தெருவும் சந்திக்கும் பகுதியில் மனை முழுவதுமாக காலியிடமாகவே உள்ளது. இவற்றில் ஒரு சிறு பகுதியில் மட்டும் தற்காலிக இரும்பு கூரை அமைக்கப் பெற்றுள்ளது.

மனுதாரர் மனுவில் குறிப்பிடும் தனது மனைக்கு அணுகுபாதை இல்லை என குறிப்பிடுவது தவறான தகவல் ஆகும். மேற்கண்ட இடத்தில் கள ஆய்வின்போது இம்மனைப்பிரிவும் தாமல்வார் தெருவும் சந்திக்கும் இடத்தில் தடுப்புகளோ, ஆக்கிரமிப்புகளோ ஏதும் இல்லை. (புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன).

மேலும், இவ்விடம் குறித்து காஞ்சிபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S. No.497/2000 என வழக்கு அன்றைய நில உரிமையாளரான திரு. சம்பந்தம், திருமதி கிருஷ்ணவேணி ஆகியோரால் வழக்கு தொடரப்பட்டு, அதன்பேரில் மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் மனுதாரரால் கோரப்பட்டுள்ள காமராஜர் நகர் வழியாக மனுதாரரின் மனைப்பிரிவுக்கு பாதை ஏற்படுத்தித் தர முகாந்திரமில்லை என 30.07.2003–ல் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மனைப்பிரிவு மாநகராட்சி எல்லைக்குள் வரப்பெறாததால், அணுகு சாலை குறித்து கோனேரிக்குப்பம் ஊராட்சியினை அணுகவும், மனுதாரரின் உரிய முகாந்திரமில்லாத புகாரை இரத்து செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரர் சார்பாக திரு. விவேக் ஆனந்த் என்பவர் 17.02.2025 அன்று நடைபெற்ற மறுவிசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"காஞ்சிபுரம், கோனேரிக்குப்பம் கிராமத்தில் பட்டா எண்.8687 சர்வே எண்.148/55 மற்றும் பட்டா எண்.8689 சர்வே எண்.148/57லும் உள்ள இரு மனைகள் ஆகும். இந்த மனைகள் காமராஜர் தெரு, கிழக்கே தாமல்வார் தெருவினையும், மேற்கே பெரிய கம்மாளத் தெருவினையும், காமராஜர் தெருவானது இணைக்கின்றது. காமராஜர் தெருவின் நடுவில் உள்ள பிள்ளையார் கோவிலானது முற்றிலும் மக்கள் செல்லும் வழியில் கட்டப்பட்டுள்ள நிலையில் எனது மனைகளுக்கு பெரிய கம்மாளத் தெருவுக்கு காமராஜர் தெரு வழியாக செல்ல இயலவில்லை.

மேலும் காமராஜர் சாலையின் மற்றொரு பகுதியில் இரயில்வே துறையினர் அமைத்துள்ள தற்காலிக கூடாரத்தில் பொருட்கள் வைக்க பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் அதனை ஒரு நபர் ஆக்கிரமித்து அந்த கூடாரத்தை மேலும் விரிவு படுத்தி காமராஜர் தெருவிலிருந்து தாமல்வார் தெரு செல்ல இயலாதவாறு செல்லும் வழி தடுக்கப்பட்டுள்ளது.

எனவே, காமராஜர் தெருவின் நடுவில் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள பிள்ளையார் கோவிலை அகற்றியும், காமராஜர் தெருவிலிருந்து தாமல்வார் தெருவிற்கு செல்லும் வழியில் அனுமதியில்லாமல் அமைந்துள்ள தகர கொட்டகையுடன் கூடிய கட்டிடத்தை அகற்றியும் எனது வீட்டு மனைக்கு செல்ல வழி ஏற்படுத்தி தருமாறு காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு விடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எனது வீட்டு மனை பகுதி ஒட்டி, காஞ்சிபுரம் மாநகராட்சி வார்டு எண்.4ற்கு உட்பட்ட வெள்ளக்குளம் பகுதியில் ஆக்கிரமிப்புகள் அகற்ற அப்பகுதி வாழ் மக்களுக்கு காஞ்சிபுரம் மாநகராட்சி சார்பாக காஞ்சிபுரம் ஆணையர் அறிவிப்பு அளித்துள்ளார். அதற்கான ஆதாரத்தை இம்முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கின்றேன்'' என தெரிவித்துள்ளார்.

10. எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் 17.02.2025 அன்று நடைபெற்ற மறுவிசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

“மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தினை மாநகராட்சி அலுவலர்களுடன் கள ஆய்வு செய்ததில் அம்மனைப்பிரிவு காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கோனேரிக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியாக உள்ளது. இம்மனைப்பிரிவில் வடக்கு திசையில் இரயில்வே பாதையும் மற்றொரு பகுதியான கிழக்கு திசையில் மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு (தாமல்வார் தெருவும்) சொந்தமான காஞ்சிபுரம் ஏனாத்தூர் இணைப்பு சாலை (ODR) அமைந்துள்ளது. மனுதாரரின் நிலமும், தாமல்வார் தெருவும் சந்திக்கும் பகுதியில் மனை முழுவதுமாக காலியிடமாகவே உள்ளது. இவற்றில் ஒரு சிறு பகுதியில் மட்டும் தற்காலிக இரும்பு கூரை அமைக்கப் பெற்றுள்ளது. மனுதாரர் மனுவில் குறிப்பிடும் தனது மனைக்கு அணுகுபாதை இல்லை என குறிப்பிடுவது தவறான தகவல் ஆகும். மேற்கண்ட இடத்தில் கள ஆய்வின்போது. இம்மனைப்பிரிவும், தாமல்வார் தெருவும் சந்திக்கும் இடத்தில் தடுப்புகளோ, ஆக்கிரமிப்புகளோ ஏதும் இல்லை. இப்பொருள் தொடர்பாக புகைப்பட ஆதாரத்தினை இம்முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன்.

அ) மனுதாரர் கோரியவாறு காமராஜர் தெருவில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலை அகற்றினால் அங்கு சட்ட, ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்பதையும் ,

ஆ) கோனேரிக்குப்பம் ஊராட்சி, தாமல்வார் பகுதியில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள தகர கொட்டகை அமைந்துள்ள பகுதி மாநில நெடுஞ்சாலை துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும்,

இ) காஞ்சிபுரம் மாநகராட்சி வார்டு எண்.4ற்கு உட்பட்ட வெள்ளக்குளம் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அறிவிப்பு அளித்தது குறித்து காஞ்சிபுரம் மாநகராட்சி பொறியியல் பிரிவிற்கு தகவல் ஏதுமில்லை.

என இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

**11.** இந்நிலையில், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திருமதி அனிதா ஆனந்த் என்பவரின் **25.11.2024** நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் **24.01.2025** மற்றும் **17.02.2025** ஆகிய நாட்களில் நடைபெற்ற விசாரணையில் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தின் கண்காணிப்பாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் சரியான விளக்கம் அளிக்கப்படவில்லை என்பதால், மனுதாரரின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் மேற்கண்ட அலுவலர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, புகாரில் தெரிவிக்கப்பட்ட பகுதியினை நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு, இம்முறைமன்றத்தில் **06.03.2025** அன்று நேரடியாக ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும் வேறு நபர்களை அனுப்ப வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

**12.** காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது 04.03.2025 நாளிட்ட அறிக்கையில்,

> "மனுதாரருக்கு சொந்தமான கோனேரிக்குப்பம் ஊராட்சி புல எண்.148/55 மற்றும் 148/57ல் உள்ள இடம் நகரளவு ஆவணங்களின்படி, மாநகராட்சி எல்லையில் வார்டு 4, பிளாக் 17, நகரளவு எண்.1280/1ல் அமைந்துள்ள வெல்லக்குளம் எனும் நீர்நிலை புறம்போக்கிற்கு அப்பால் அமைந்துள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள பிள்ளையார் கோவில் உட்பட 227 குடியிருப்புகள் மேற்படி நீர்நிலையில் ஆக்கிரமிப்பில் உள்ளது. இது தொடர்பாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு O.A.எண்.207/2017ல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.
>
> மனுதாரர் குறிப்பிட்டுள்ள மற்றொரு வழியான தாமல்வார் தெருவிற்கும், மனுதாரர் இடத்திற்கு இடையிலும் வெல்லக்குளம் அமைந்துள்ளது. மேற்படி தாமல்வார் தெரு நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையாகும். எனவே, எந்தவகையிலும் மனுதாரர் இடத்திற்கு நிலஅளவை ஆவணங்களின்படி மாநகராட்சி எல்லையிலிருந்து அணுகு பாதை அமைக்க வழிவகை இல்லை.
>
> மனுதாரர் குறிப்பிட்டுள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான தாமல்வார் தெரு ஆக்கிரமிப்புகள் மாநில நெடுஞ்சாலை துறை மூலம் அகற்றப்பட வேண்டும். பிள்ளையார் கோவில் உள்ளிட்ட வெல்லக்குளம் நீர்நிலையில் உள்ள குடியிருப்பு மற்றும் சிமெண்ட் சாலை உள்ளிட்ட ஆக்கிரமிப்புகள் தேசிய பசுமை தீர்ப்பாய தீர்ப்பின் அடிப்படையில் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

**13.** மனுதாரர் சார்பாக திரு. விவேக் ஆனந்த் என்பவர் **06.03.2025** அன்று நடைபெற்ற மறுவிசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

> ''இன்றைய விசாரணையில் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் குறிப்பிட்ட காஞ்சிபுரம் மாவட்ட உரிமையியல் O.S No.497/2000 வழக்கு நில உரிமையாளருக்கும் அங்கு ஆக்கிரமித்து குடியிருப்பவர்களுக்கும் இடையே நடைபெற்ற வழக்காகும். அந்த வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள "மனைப்பிரிவிற்கு பாதை ஏற்படுத்தி தர முகாந்திரம் இல்லை" என்ற தீர்ப்பு எங்கள் மனைப்பிரிவிற்கு அணுகு சாலை கோருவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள எதிர்மனுதாரர்களின் ஆக்கிரமிப்பினை அகற்ற கோரவில்லை. ஆனால் காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
>
> மேற்காணும் சூழ்நிலையில் மேற்சொன்ன எனது கோரிக்கை தொடர்பாக ஆக்கிரமிப்பினை அகற்றி எங்கள் மனைக்கு செல்ல வழி ஏற்படுத்தி கொடுக்குமாறு உரிய நடவடிக்கை எடுக்க காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்திரவிடுமாறு

இம்முறைமன்ற நடுவத்தினை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

14. எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் 06.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

“மனுதாரருக்கு சொந்தமான கோனேரிக்குப்பம் ஊராட்சி புல எண்.148/55 மற்றும் 148/57ல் உள்ள இடம் நகரளவு ஆவணங்களின்படி, மாநகராட்சி எல்லையில் வார்டு 4, பிளாக் 17, நகரளவு எண்.1280/1ல் அமைந்துள்ள வெல்லக்குளம் எனும் நீர்நிலை புறம்போக்கிற்கு அப்பால் அமைந்துள்ளது.

மனுவில் குறிப்பிட்டுள்ள பிள்ளையார் கோவில் உட்பட 227 குடியிருப்புகள் மேற்படி நீர்நிலையில் ஆக்கிரமிப்பில் உள்ளது. இது தொடர்பாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு O.A. எண் 207/2017ல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மற்றொரு வழியான தாமல்வார் தெரு நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையாகும். மனுதாரர் அணுகு பாதை கோருமிடத்தில் உள்ள சாலையானது காஞ்சிபுரம் மாநகராட்சியின் எல்லைக்குள் அமையவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான தாமல்வார் தெரு ஆக்கிரமிப்புகள் மாநில நெடுஞ்சாலை துறை மூலம் அகற்றப்பட வேண்டும்.

மேலும், மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு பாதை ஏற்படுத்த கோரப்பட்டது தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு O.S.No.497/2000 அன்றைய நில உரிமையாளர் ஆகியோரால் தொடரப்பட்டு மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் 30.07.2023ல் காமராஜர் நகரிலிருந்து புகார்தாரரால் கோரப்பட்டுள்ள காமராஜர் நகர் வழியாக மனைப்பிரிவிற்கு பாதை ஏற்படுத்தி தர முகாந்திரம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார் கோவில் உள்ளிட்ட வெல்லக்குளம் நீர்நிலையில் உள்ள குடியிருப்பு மற்றும் சிமெண்ட் சாலை உள்ளிட்ட ஆக்கிரமிப்புகள் தேசிய பசுமை தீர்ப்பாய தீர்ப்பின் அடிப்படையில் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

15. மனுதாரரின் மனு, வாக்குமூலங்கள் மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அலுவலர்களின் வாக்குமூலங்கள், தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், காஞ்சிபுரம், கோனேரிக்குப்பம் கிராமத்தில் பட்டா எண் 8687 சர்வே எண் 148/55 மற்றும் பட்டா எண் 8689 சர்வே எண் 148/57லும் உள்ள இரு மனைகள் காமராஜர் தெரு வடக்கு வரிசையில் உள்ளது என்றும் இந்த தெருவானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் சாலையாகும் எனவும், கிழக்கே தாமல்வார் தெருவினையும் மேற்கே பெரிய கம்மாளத் தெருவினையும் காமராஜர் தெருவானது இணைக்கிறது எனவும், காமராஜர் தெருவின் நடுவில் உள்ள பிள்ளையார் கோவிலானது முற்றிலும் மக்கள்செல்லும் வழியில் கட்டப்பட்டுள்ள நிலையில் தனது மனைகளுக்கு பெரிய கம்மாளத் தெரு வழியாக செல்ல இயலவில்லை எனவும், காமராஜர் சாலையின் மற்றொரு பகுதியில் இரயில்வே துறையினர் அமைத்துள்ள தற்காலிக கூடாரத்தில் பொருட்கள் வைக்க பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் அதனை ஒரு நபர் ஆக்கிரமித்து அந்த கூடாரத்தை மேலும் விரிவு படுத்தி காமராஜர் தெருவிலிருந்து தாமல்வார் தெரு செல்ல இயலாதவாறு செல்லும் வழி தடுக்கப்பட்டுள்ளது எனவும் காஞ்சிபுரம் மாநகராட்சியும் மழைநீர் வடிகால்வாய் மூலம் தனது பக்கத்து மனையில் மழைநீர் வடிய ஏற்பாடு செய்துள்ளது எனவும், இதனால் தனது மனைக்கு செல்லும் வழிகள் யாவும் அடைக்கப்பட்டுள்ள நிலையில் தாசில்தார்

மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சியை அணுகியும் எந்த வித பயனும் இல்லை என்றும், 02.09.2024 அன்று தாசில்தார் மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் இருவருக்கும் அனுப்பிய மனுவில் இந்த தடைகளை அகற்றவும் மழைநீர் தேங்குவதை தடுக்கவும் கோரியிருந்ததாகவும், இது தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் இருவருக்கும் புகார் அனுப்பியும் எந்தவித நடவடிக்கையும் இல்லை என்பதால், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி தனது மனைக்கு செல்ல வழி ஏற்படுத்தி கொடுக்குமாறு உரிய நடவடிக்கை எடுக்க காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியுள்ளார்.

மனுதாரருக்கு சொந்தமான கோனேரிக்குப்பம் ஊராட்சி புல எண்.148/55 மற்றும் 148/57ல் உள்ள இடம் நகரளவு ஆவணங்களின்படி, மாநகராட்சி எல்லையில் வார்டு 4, பிளாக் 17, நகரளவு எண்.1280/1ல் அமைந்துள்ள வெல்லக்குளம் எனும் நீர்நிலை புறம்போக்கிற்கு அப்பால் அமைந்துள்ளது எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ள பிள்ளையார் கோவில் உட்பட 227 குடியிருப்புகள் மேற்படி நீர்நிலையில் ஆக்கிரமிப்பில் உள்ளது எனவும், இது தொடர்பாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு O.A. எண் 207/2017ல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மற்றொரு வழியான தாமல்வார் தெரு நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையானதால், மனுதாரர் அணுகு பாதை கோருமிடத்தில் உள்ள சாலையானது காஞ்சிபுரம் மாநகராட்சியின் எல்லைக்குள் அமையவில்லை என்றும், அச்சாலை ஆக்கிரமிப்புகளை மாநில நெடுஞ்சாலை துறை மூலம் அகற்றப்பட வேண்டும் எனவும், மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு பாதை ஏற்படுத்த கோரப்பட்டது தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு O.S.No.497/2000 அன்றைய நில உரிமையாளர் ஆகியோரால் தொடரப்பட்டு மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் 30.07.2023ல் காமராஜர் நகரிலிருந்து புகார்தாரரால் கோரப்பட்டுள்ள காமராஜர் நகர் வழியாக மனைப்பிரிவிற்கு பாதை ஏற்படுத்தி தர முகாந்திரம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், பிள்ளையார் கோவில் உள்ளிட்ட வெல்லக்குளம் நீர்நிலையில் உள்ள குடியிருப்பு மற்றும் சிமெண்ட் சாலை உள்ளிட்ட ஆக்கிரமிப்புகள் தேசிய பசுமை தீர்ப்பாய தீர்ப்பின் அடிப்படையில் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும், மனுதாரர் திருமதி அனிதா ஆனந்த் என்பவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புளை அகற்றிட தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் வழக்கு O.A.எண் 207/2017–னை காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஏ. அயூப்கான், பி. சிவசங்கரன் மற்றும் பி. நந்தினி ஆகியோரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மேற்காணும் பொருண்மைகளை பரிசீலித்ததில் வழக்கு O.A. எண் 207/2017–ல் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளபடி ஆக்கிரமிப்புகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில், மனுதாரரின் கோரிக்கைக்கு தீர்வு ஏற்படும் என்பதால், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மேற்கண்ட தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் ஆணையிட்டவாறு சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து மேல் நடவடிக்கை எடுக்குமாறு காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு மே திங்கள் 15ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திருமதி அனிதா ஆனந்த்,
எண்.2 தெற்கு கிருஷ்ணன் தெரு,
(பழைய இரயில்வே நிலையம் அருகில்),காஞ்சிபுரம்–631 502.

(2)ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(4) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.